**இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் அதன் நடவடிக்கைகள் மீது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

-----------------------------------------------------------------------------------------------------------

**1. அபிப்பிராயம்**

-------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

------------------------------

இலங்கை சமூக பாதுகாப்புச் சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து,நிலையத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-------------------------------------------

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

---------------------------------------------------------------------------------------------------

ந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாகதொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினைமதிப்பீடு செய்தல்,தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம்,நிலையத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

----------------------

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவாஎன்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது

தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இசைவுறாமை

| உரிய நியமங்களுக்கு ஏற்ப காணப்படாமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நடைமுறை அல்லாத சொத்துகளுக்கு செயல்திறன்மிக்க ஆயட் காலமானது வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக செலவினம் ரூ.9,961,979 பெறுமதியான நிலையான சொத்துகள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் ஏற்பட்டுள்ள மதிப்பீட்டு ரீதியான தவறினை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் மீளமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு பொதுத் துறை கணக்கீட்டு நியம இல. 03 இன் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் நிதிக் கூற்றுகளுடன் தாக்கம் செலுத்துகின்ற கொடுக்கல் வாங்கல்கள் காணப்படுமாயின் அதற்கு நேரொத்த கணக்கீட்டு கொள்கைகளை இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப செயற்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

------------------------

| கணக்கீட்டு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டு காலப் பகுதியினுள் பங்காளர்களை சேர்த்துக் கொள்வதற்காக செலுத்தப்பட்ட ரூ. 4,069,526 பெறுமதியான ஊக்குவிப்பு கொடுப்பனவு திரண்ட ஊக்குவிப்பு கொடுப்பனவின் கீழ் சீராக்கம் செய்யாது மீளாய்வு ஆண்டிற்கான சமூக, பாதுகாப்பு நிதியத்திலிருந்து அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஆண்டிற்குரிய இலாபமானது அத்தொகையினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | ஊக்குவிப்பு கொடுப்பனவாக செலுத்திய ரூ. 4,069,526.00 பெறுமதியான தொகை 2016 இற்கான ஆட்சேர்ப்பு மற்றும் தவணை அறவீடுகள் என்பவற்றிற்கு செலுத்த வேண்டிய ஒரு தொகையாக இருந்ததுடன், அதன் கணிப்பீடுகளை மேற்கொண்டு உண்மையாக கொடுப்பனவுகள் 2018 ஆம் ஆண்டிலேயே மேற்கொள்ளப்பட்டது. 2017 ஆம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இது திரண்ட செலவினம் ஒன்றாக இனங்காணப்பட்டிருக்காமையாலும், வேறு தரப்பு ஒன்றிற்கு செலுத்த வேண்டியிருந்த தொகையொன்றாக இருந்தமையாலும் 2017 ஆம் ஆண்டிற்கான உண்மையான செலவொன்றாக கருதி கொடுப்பனவு செய்யப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்தது. | செலவினத்தை இனங் காணும் போது செலவிற்குரிய கால எல்லையினை சரியாக உறுதிப்படுத்திக் கொண்டு அதன் பிரகாரம் கணக்குப் பதிவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கு எழுத்து மூல சான்றாதாரங்கள் காணப்படாமை

----------------------------------------

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சாட்சிகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | | | |
| (அ) | திரண்ட ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் | 1,794,756 | மீளாய்வு ஆண்டிலே திரண்ட ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூ.1,794,756 பெறுமதியான தொகை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு செலுத்த வேண்டியிருந்த | இம்மீதியானது மிகை ஒதுக்கம் ஒன்றாக இனங் காணப்பட்டதுடன் 2019/242/5 பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் இதனை இறுதிக் கணக்குகளில் | இவ்வாறான ஒதுக்கங்களின் தேவையை இனங் கண்டு மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நபர்களின் பெயர்கள், தொகை மற்றும் ஏனைய விபரங்கள் அடங்கிய முழு விபரத்துடன் கூடிய பெயர் பட்டியல் ஒன்று சபையினால் பேணி வரப்பட்டிருக்கவில்லை. | இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | |
| (ஆ) | ஊக்குவிப்பு கொடுப்பனவு | 9,439,135 | மீளாய்வு ஆண்டு காலப் பகுதியில் ஊக்குவிப்பு கொடுப்பனவாக ரூ. 9,439,135 பெறுமதியான தொகை கொடுப்பனவு செய்யப்பட்டுள்ள போதிலும், அப்பணத்தை பெற்றுக் கொண்டதாக குறித்த நபர்களிடமிருந்து எழுத்து மூல சாட்சிகள் பெறப்பட்டிருக்கவில்லை. | இந்த பணக் கொடுப்பனவுகள் பற்றிய அறிக்கை ஒன்றுடன் பிரதேச செயலாளர்களுக்கு மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு முன்னளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | பணம் செலுத்தும் போது உரிய நபர்களுக்கான தொகையினை செலுத்தியதாக உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். |

### 1.5.5 கிடைக்க வேண்டிய கணக்குகள்

---------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியன்று சபையிலிருந்து விலகிச் சென்ற 28 அலுவலர்களிடம் இருந்து ரூ. 441,146 பெறுமதியான தொகை கிடைக்க வேண்டியிருந்ததுடன் 06 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகள் 05 காணப்பட்டன. | கிடைக்க வேண்டிய தொகை 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையில் பரவிக் காணப்படுவதுடன் 2018 ஆம் ஆண்டிலே இது தனித்தனியாக இனங் காணப்பட்டதுடன், தொடர்ந்தும் அறவிட்டுக் கொள்ளக்கூடிய மீதிகளை அறவிட்டுக் கொள்ளவதற்கு தேவையான | சபையினால் அறவிட்டுக் கொள்ள வேண்டிய மீதிகளை தாமதமின்றி அறவிடுதல் வேண்டும். |

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதன் முன்னேற்றத்தினையும் கருத்திற் கொண்டு எவ்விதத்திலும் அறவிட முடியாது உள்ள தொகைக்காக மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய விதம் பற்றி ஆலோசனையை பெற்றுக் கொள்வதற்கு பணிப்பாளர் சபையிடம் ஆற்றுப்படுத்துவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

**1.5.6 சட்டங்கள், ஒழுங்கு விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இசைவுறாமை**

| | சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளின் முன்னளிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கை சமூக பாதுகாப்பு நிதிய சட்டத்தின் 15(2) பிரிவின் பிரகாரம் நன்மைகள் இல்லாது போயுள்ள சந்தர்ப்பங்களின் போது அது பற்றி சபையினால் அந்நிறுவனத்திற்கு அறிவித்தல் வேண்டும். 2014 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலவிய முறைமை செயலிழந்த தினத்தன்று செயலிழந்த பங்களிப்பாளர்களின் எண்ணிக்கை 288,234 ஆகும். எனினும், 2015 ஆம் ஆண்டு முதல் 2019 மார்ச் வரையில் செயலிழந்த பங்களிப்பாளர்களை இனங் காணுவதற்கு முறைமை | 2014 ஆம் ஆண்டு முதல் கணினி முறைமையில் Monthly Run எனும் தொழிற்பாடு இடம்பெறாமையினால் செயற்படாத பங்களிப்பாளர்களின் ஆவணத்தை பெற்றுக் கொள்ள முடியாது போனமையினால் ஒவ்வொரு அங்கத்தவருக்கும் செயலிழந்தமைக்கான அறிவித்தலை வழங்க முடியாது போயுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சபையின் பிரதான பணி இந்த ஓய்வு‘திய முறைமையை அமுல்படுத்து வதாக உள்ளமையால் இது பற்றிய தரவு முறைமையை இற்றைப்படுத்த ி பேணி வர வேண்டியமை தாமதமின்றி மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்படாமையினால் அந்த பங்களிப்பாளர்களுக்க அது பற்றிய அறிவித்தலை வழங்க முடியாது போயிருந்தது. | | |
| (ஆ) | 1999 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க இலங்கை சமூகப் பாதுகாப்பு சபை சட்டத்தின் 6அ(1) பிரிவின் பிரகாரம் சமூகப் பாதுகாப்பு, சமூக நலன்புரி வசதிகள், காப்புறுதி, ஆயட்கால மதிப்பீடு, நிருவாகம், நிதி அல்லது முகாமைத்துவம் உள்ளிட்ட துறைகளில் அனுபவமுள்ள அல்லது ஆற்றல்மிக்க நபர்களிலிருந்து ஒன்பது பேருக்கு மேற்படாத எண்ணிக்கையினை உள்ளடக்கிய தொழில்நுட்ப ஆலோசனை குழு ஒன்றை அமைச்சரினால் நியமித்தல் வேண்டும். 2017 ஆம் ஆண்டின் பின்னர் அக்குழு நியமிக்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள துறைகளை உள்ளடக்கும் வகையில் தொழில்நுட்பக் குழுவொன்றை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டிருந்தது. | இக்குழுவினால் நிறுவனத்தின் குறிக்கோளை அடைந்து கொள்வதற்கு ஒத்துழைப்பு கிடைக்கப் பெறுவதனால் தாமதமின்றி இக்குழுவை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

----------------------

### 2.1 நிதி பெறுபேறு

-------------

மீளாய்வு ஆண்டிலே தொழிற்பாட்டு பெறுபேறான ரூ.3,126,602 பெறுமதியான குறைபாடொன்றினை காட்டியதுடன் அதற்கு நேர் ஒத்ததாக கடந்த ஆண்டின் குறைபாடானது, ரூ.7,714,627 ஆக அமைந்திருந்தது. அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூ.4,552,025 பெறுமதியான விருத்தி ஒன்றினை அவதானிக்க முடிந்தது. இந்த விருத்திக்கு திறைசேரியிலிருந்து கொடைகளின் அதிகரிப்பு பிரதானமாக தாக்கம் செலுத்தியிருந்தது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

--------------------------

### 3.1 முகாமைத்துவத்தின் இயலாமை

------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஓய்வு‘தியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு நன்மை திட்டத்தின் கீழ் மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 திகதி அன்று 25 மாவட்டங்களில் நேரடி ஆட்சேர்ப்பின் கீழ் “சுரெகுமபூ மற்றும் “ஆரக்ஷாவபூ சமூக பாதுகாப்பு திட்டங்கள் 02 இற்கு 82,836 நபர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் சமூகப் பாதுகாப்பு நன்மை திட்டம் பற்றி உரியவாறு விளக்காமல் இருந்தமை காரணமாக பொலன்னறுவை, இரத்தினபுரி, கொழும்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஆண்டு காலப் பகுதியில் மொத்தமாக 500 இற்கும் குறைவான தொகையினரே சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் இலங்கை சமூக பாதுகாப்பு சபை வரலாற்றில் அதி கூடிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொண்டமை பற்றி அறிவிக்க முடிந்தது. அவ்வாறாயினும், அவதானிக்கப்பட்ட விடயம் கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் முன்னேற்றம் மிகவும் குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. அந்த முன்னேற்றத்தை விருத்தி செய்வதற்காக இணைப்புச் செய்யப்பட்டுள்ள ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், அவர்களை தலைமை அலுவலகத்திற்கு அழைத்து எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டத்தில் மாத்திரம் ஓரளவு முன்னேற்றம் ஒன்றைக் காட்டுவதற்கு முடிந்துள்ளது. | ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் அது பற்றிய பின்னூட்டல்களை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வு ஆண்டினுள் மொத்தமாக 82,836 அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதுடன் அதில் முதல் 11 மாத காலப் பகுதியினுள் சேர்த்துக் | அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளும் பணியானது ஆண்டின் இறுதி காலாண்டினுள் அதிகமான தொகையினரை சேர்த்துக் கொள்ளும் சிக்கல் வாய்ந்த | அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்ளும் போது போட்டித் தன்மையை கவனத்திற் கொள்வதை விடவும் பங்களிப்புச் செலுத்துபவர் |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்ட மொத்த பங்களிப்பு செலுத்துவோரின் எண்ணிக்கை 40,313 ஆகும். டிசம்பர் மாதத்தில் மாத்திரம் 40,028 சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். கடந்த ஆண்டிலும் இந்நிலை ஏற்பட்டுள்ளமையினால் 2018 சனவரி மாதம் 11 ஆம் திகதி பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது இது பற்றி கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் இந்நிலையானது பல பிரச்சினைகளுக்கு காரணமாக உள்ளதாகவும், வருடத்தின் முதல் காலாண்டு பகுதியினுள் அங்கத்தவர்களுக்கு விழிப்பு‘ட்டி உரிய ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அது பற்றி கவனம் செலுத்தாமை காரணமாக மீளாய்வு ஆண்டிலும் அந்நிலை ஏற்பட்டிருந்தது. | நிலை பற்றி தொடர்ந்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அனைத்து மாவட்ட அலுவலர்களுக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | தவணை தொகையினை தொடர்ச்சியாக செலுத்துவதை பின்னூட்டல் செய்தல் வேண்டும். |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டின் சனவரி 11 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது செயலிழந்துள்ள உறுப்பினர்களை செயல் வழுப் பெறச் செய்வதற்கான வழிகாட்டல் கருத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் முன்னேற்றமானது 2019 மே மாதமாகும் போதும் பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வு ஆண்டிலே (2018) செயலிழந்த பங்காளர்களை செயல் வழுப் பெறச் செய்யும் திட்டத்தை நுவரெலியா மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் அதில் குறிப்பிடத்தக்க காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. தற்போது கிராம அலுவலர்கள் ஓய்வு‘திய சம்பளத் திட்டத்தில் இருந்து வெளியேறியுள்ளமையால் தொடர்ந்தும் அதில் கால தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. | குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியமை முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஓய்வு'திய திட்டத்திற்காக பங்களிப்பாளர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்ததுடன் அந்த பங்களிப்பாளர்கள் உரியவாறு தவணை கொடுப்பனவினை செலுத்துகின்றார்களா என்பது பற்றியும் மற்றும் பங்களிப்பு தொகையினை செலுத்துவது பற்றி பங்களிப்பாளர்களுக்கு அறிவித்தல் / நினைவு'ட்டல் அனுப்புதல் மற்றும் தவணை அறவீடு தொடர்பான பரீட்சித்தல் பணிகள் மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்களின் கடமைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறான போதிலும், அதன் பிரகாரம் செயலாற்றி பங்களிப்பாளர்களை செயலிழக்கும் நிலையினை குறைத்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணினி முறைமையில் செயலிழந்த அங்கத்தவர்களின் பட்டியலை சரியாக பெற்றுக் கொள்ள முடியாது உள்ளமை காரணமாக இதனை மேற்கொள்ள முடியாது உள்ளது. புதிய முறைமை ஒன்றினை தயாரித்தவுடன் 2019 ஆம் ஆண்டின் இறுதி காலப் பகுதியிலிருந்து இது ஆரம்பிக்கப்படும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | சபையின் கணினி முறைமையை இற்றைப்படுத்தி பேணி வருவதற்கு தேவையான பணிகளை துரிதமாக மேற்கொண்டு பங்காளர்கள் செயலிழக்கும் நிலையை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கலாசார அலுவல்கள் அமைச்சிடமிருந்து கலைஞர்களுக்கு சமூகப் பாதுகாப்பு முறைமையின் கீழ் ஓய்வு'தியம் ஒன்றினைப் பெற்றுக் கொடுப்பதற்கு 2016 ஆம் ஆண்டிலே ரூ.29,000,000 தொகையும், 2017 ஆம் ஆண்டிலே ரூ.65,000,000 தொகையும் என்ற அடிப்படையில் ரூ.94,000,000 சபையிடம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த நிதியிலிருந்து கலைஞர்களுக்கு ஓய்வு'தியம் வழங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. அப்பணத்தை முதலீடு செய்து வருமானம் ஈட்டும் பணி | 2016 மற்றும் 2017 ஆண்டு காலப் பகுதியினுள் முறையே ரூ. 29,000,000 மற்றும் ரூ.65,000,000 சபையிடம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகையினை முதலீடு செய்ததன் மூலம் வருடாந்தம் கிடைக்கப் பெறுகின்ற வட்டி வருமானத்திலிருந்து இந்த ரூ.50,000 ஒதுக்கப்படுகின்றது. அவ்வாறு ஒதுக்கிய தொகை குறித்த கலைஞர்களின் பெயரில் வைப்புச் செய்யப்படுவதுடன் அதன் மீது உழைக்கின்ற மொத்தத் தொகையும் கலைஞர் ஓய்வுபெறும் சந்தர்ப்பத்தில் முழுத் தொகையாக | சபையினால் கலாசார அலுவல்கள் அமைச்சுடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த தொகையினை உரிய சேவைக்காக ஈடுபடுத்துவதற்கு 02 ஆண்டு காலப் பகுதியிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்தப்படுகின்றது. ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த தெகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த திட்டத்தில் 113 கலைஞர்கள் அங்கத்துவம் பெற்றுள்ளதுடன் அதற்காக உரியவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | |

## 3.2 நிதியத்தின் குறை பயன்பாடு

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் ---------------------- | முகாமைத்துவத்தின் கருத்துரை -------------------------------- | பரிந்துரை -------------- |
|---|---|---|
| 3 வருட காலப் பகுதியினுள் பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைக்கப் பெற்ற மூலதனக் கொடைகளிலிருந்து ரூ.12,511,000 பெறுமதியான தொகை சமூக பாதுகாப்பு ஓய்வூதிய சம்பள முகாமைத்துவத்திற்காக தகவல் முறைமை ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக திறைசேரிக்கு அறிவித்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்த கணினி முறைமை 03 வருடங்களாக கொள்வனவு செய்யாமையால் நிதி ஏற்பாட்டுத் தொகையானது குறை பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது. | 2016 ஆம் ஆண்டாகும் போது புதிய கணினி முறைமை ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு திட்டமிட்டிருந்தமையினால் பொதுத் திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற மூலதன ஏற்பாடுகளிலிருந்து ரூ. 2,497,000 தொகை நிறுத்தி வைக்கப்பட்டது. 2017.10.20 ஆம் திகதி அமைச்சின் செயலாளரின் அனுமதி கிடைக்கப் பெற்றதுடன் 2017 ஆம் ஆண்டிலே பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டது. அச்சமயம் மூலதன நிதி ஏற்பாடுகளில் 2016 ஆம் ஆண்டிற்கு கிடைக்கப் பெற்ற நிதி ஏற்பாடுகள் மாத்திரமே நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தமையினால் அந்த ஆண்டில் கிடைக்கப் பெற்ற மூலதன ஏற்பாட்டு தொகையும் நிறுத்தி வைக்கப்பட்டது. 2018 | அப்பணிகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கு திட்டமிட்டு பொதுத் திறைசேரியின் நிதி ஏற்பாடுகள் குறை பயன்பாட்டிற்கு உட்படுவதை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஆம் ஆண்டிலே எபிக் லங்கா நிறுவனத்துடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டமையினால் கொடுப்பனவு பணிகளை மேற்கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டின் மூலதன ஏற்பாடுகளை வைத்துக் கொண்டதுடன் இந்த நிதியிலிருந்து முதலாவது வழங்கல் தொகுதிக்கான மொத்தத் தொகையில் 10% 2019.02.14 ஆம் திகதி எபிக் லங்கா நிறுவனத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் 2வது வழங்கல் தொகுதிக்கான கொடுப்பனவுகள் எதிர்வரும் காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

## 3.3 சொத்துக்களின் குறை பயன்பாடு

-----------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் பற்றிய விளம்பர பணிகளுக்காக குறும் தகவல் திரைப்படங்கள் 02 2014 ஆம் ஆண்டிலே தயாரித்து விளம்பரப்படுத்துவதற்கு ரூ. 824,000 பெறுமதியான தொகையினை செலவிட்டு மும்மொழிகளிலும் இருவட்டுகள் 6500 தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கடந்த ஆண்டுகளில் அந்த இருவட்டுக்களை உரியவாறு விநியோகிக்க முடியாது போனமையினால் மீளாய்வு ஆண்டு காலப் பகுதியாகும் போது அதில் 4762 வழங்க முடியாது களஞ்சியத்தில் 05 வருட காலப் பகுதியாக பயன்பாடின்றி தேங்கியிருந்தது. | அதன் உள்ளக இணைவு தற்போது விளம்பரப் பணிகளுக்காக பயன்படுத்த முடியாத நிலையில் காணப்படுவதுடன் 2015 ஆம் ஆண்டின் பின்னர் DVD களை வழங்குவதற்கு களஞ்சியசாலைக்கு கட்டளைகள் கிடைக்கப் பெறவில்லை குறிப்பிடப்பட்டிருந்தது. | விளம்பரப் பணி ஒன்றினை மேற்கொள்ளும் போது அதன் தேவைப்பாடு பற்றி கவனம் செலுத்தி நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்தல் வேண்டும். |

## 3.4 பொருளாதாரம் சாராத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் தேவையான நிதியினை ஒதுக்கிக் கொள்ளாது மற்றும் பெறுகை தொழிற்பாட்டினை கடைபிடிக்காது அரசாங்க விலை மதிப்பீட்டுத் தொகையான ரூ.165,000,000 பெறுமதியினை தாண்டி சபையின் தலைமை அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்கு ஓய்வு‘ திய நிதியத்திலிருந்து ரூ.195,000,000 தொகையினை செலவிட்டு 2013 ஆம் ஆண்டிலே கட்டிடம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டு காலப் பகுதியாகும் போது அக்கட்டிடத்தை கொள்வனவு செய்து 05 வருடங்கள் கடந்துள்ள போதிலும் இது பற்றி முறையான விசாரணை ஒன்றினை மேற்கொண்டு மேலதிகமாக பணம் செலுத்தியமை தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய நபர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தை கொள்வனவு செய்வதுடன் தொடர்புடைய விலை கோரல் பணிகள், தொழில்நுட்ப குழு நியமனம், குழுவின் பரிந்துரையினை பெற்றுக் கொள்ளல், அனுமதிக்கான பணம் மற்றும் பெறுகையை அமைச்சுக்கு முன்னளித்தல் உள்ளிட்டு பெறுகை செயற்பாட்டுப் பணிகளை உரிய முறையில் மேற்கொண்ட போதிலும் பெறுகைக் குழுவின் அனுமதி பெறப்படவில்லை என குறிப்பிடப்பட்டிருந்தது. | கட்டிடத்தை கொள்வனவு செய்தல் தொடர்பாக முறையான விசாரணை ஒன்றினை மேற்கொண்டு மேலதிக கொடுப்பனவு ஏதும் இடம்பெற்றிருப்பின் அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய நபர்களை இனங் கண்டு மேலதிக கொடுப்பனவுகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.5 **பெறுகை முகாமைத்துவம்**

--------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையினால் சமூக பாதுகாப்பு ஓய்வு'திய முகாமைத்துவ தகவல் முறைமை ஒன்றினை கொள்வனவு செய்வதற்காக 2018 ஆம் ஆண்டு ஆகும் போது ரூ.12,511,000 பெறுமதியான தொகை நிதி ஏற்பாடு செய்து கொள்ளப்பட்டிருந்தது. சபையினால் முறையாக பெறுகை பணிகளை மேற்கொண்டு மீளாய்வு ஆண்டிலே பெறுகை நிறுவனம் ஒன்றினை தெரிவு செய்து ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன், அந்த ஒப்பந்த்தின் பிரகாரம் மீளாய்வு ஆண்டின் யு'ன் மாதம் முதல் முறைமையை தயாரிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2019 ஆகஸ்ட் மாதம் ஆகும் போது இந்த முகாமைத்துவ தகவல் முறைமை வழங்கல் தொகுதி 05 இனை கொண்டதாக நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அத்திட்டத்தின் பிரகாரம் டிசம்பர் மாதம் 14 ஆம் திகதியாகும் போது முதலாவது வழங்கல் தொகுதியும், இரண்டாவது வழங்கல் தொகுதி 2019 பெப்ரவரி 08 ஆம் திகதியும், மூன்றாவது வழங்கல் தொகுதி 2019 ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியும் பெற்றுக் கொடுப்பதற்கும் அதன் பிரகாரம் குறித்த வழங்கலுக்குரிய கொடுப்பனவு மற்றும் முறைமையின் பரீட்சித்தல் பணிகளை மேற்கொள்வதற்கும் வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், | தற்போது இரண்டாம் வழங்கல் தொகுதிக்கான முழு விபரத்துடன் கூடிய முறைமையின் தேவைப்பாடுகள் பற்றிய நியமக் குறிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன், இரண்டாவது வழங்கல் தொகுதியின் 75% தற்போது பூர்த்தியடைந்துள்ளது. தாமதமாகியுள்ள இந்த இரண்டாவது வழங்கல் தொகுதிக்கு குறிப்பிடத்தக்க மேலதிக காலம் ஒன்று எடுத்த போதிலும் எபிக் லங்கா நிறுவனத்தினால் இரண்டாவது வழங்கிய காலவரையறையினுள் மென்பொருள் முறைமையை எமக்கு பெற்றுத் தருவதற்கு வாக்குறுதி அளித்த தினத்தன்றே அதனை பெற்றுத் தருவதற்கு எபிக் லங்கா நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வாய்மொழி மூலம் எமக்கு அறிவித்துள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | சபையினால் சமூக பாதகாப்பு ஓய்வூதிய முகாமைத்துவ தகவல் முறைமையை துரிதமாக தயாரித்து அதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

முதலாவது வழங்கல் தொகுதி மீளாய்வு ஆண்டின் டிசம்பர் மாதம் 24 ஆம் திகதி ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2019 மே மாதம் 03 ஆம் திகதியாகும் போது கூட இரண்டாவது மற்றும் மூன்றாவது வழங்கல் தொகுதியை பெற்றுக் கொள்வதற்கு சபையினால் இயலாது போயிருந்தது.

## 3.6 மனிதவள முகாமைத்துவம்

----------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------- | ------------------------------- | ------------- |
| (அ) | சமூக பாதுகாப்பு சபையின் பொது முகாமையாளர் பதவி 2018 யு‘லை மாதம் 15 ஆம் திகதி முதல் வெற்றிடமாக இருந்து வந்ததுடன் தகைமையான ஒருவரை நியமிக்கும் வரை 2018 யு‘லை மாதம் 16 ஆம் திகதி முதல் பதில் கடமை புரிவதற்கு பிரதி பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டிருந்தார். அவ்வாறே இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2018 செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி நடாத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் விண்ணப்பதாரர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு நேர்முகப் பரீட்சைகள் சபையினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. தாபன விதிக் கோவையின் ii ஆவது அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவின் பிரகாரம் பதில் கடமைக்காக ஒருவரை | நீண்ட காலமாக இப்பதவி வெற்றிடமாக உள்ளமையினால் இத்தீர்மானமானது பணிப்பாளர் சபையினால் வழங்கப்பட்டதுடன் அந்த அனுமதியின் கீழ் இலங்கை நிருவாக சேவையின் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவரை ஆட்சேர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சபையின் பொது முகாமையாளர் பதவி சுமார் ஒரு வருட காலமாக வெற்றிடமாக உள்ளமையால் அதனை நிரப்புவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நியமிப்பதாயின் நிரந்தர ஒருவரை நியமிக்கும் வரையில் தற்காலிக செயற்பாடாக மற்றும் குறித்த பதவிக்கு முழு நேர அலுவலர் ஒருவரின் சேவை தேவையாயின் நிரந்தர நியமனத்தை தாமதமின்றி மேற்கொள்ளல் வேண்டும். எவ்வாறாயினும் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அதிகாரியை ஆட்சேர்ப்பு செய்யாது 09 மாதங்கள் பதில் கடமை அடிப்படையில் அப்பணி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வு ஆண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியாகும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதி பெறப்பட்ட கணினி வலையமைப்பு உதவியாளர் பதவி 01 உம், முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் 07 உம், புத்தகப் பதிவாளர் பதவி 01 உம் மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் பதவிகள் 03 உம் வெற்றிடமாக இருந்தது. அதன் பிரகாரம் அனுமதி பெறப்பட்ட 12 பதவிகளுக்கு காணப்பட்ட ஆட்சேர்ப்பு பணிகளின் தாமதம் காரணமாக சமூக பாதுகாப்பு பணிகளுக்கு தாக்கம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வினால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | 2018 டிசம்பர் ஆகும் போது நிலவிய வெற்றிடங்களுக்கு 2019.05.02 ஆம் திகதி ஆட்சேர்ப்பு செய்யப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட புதிய பதவியான கணினி வலையமைப்பு உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் அப்பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதித்து எமக்கு கிடைக்கப் பெறாமையினால் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தேவையான மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது உள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படாதவாறு தேவையான பதவிகளுக்கு அலுவலர்களை தாமதமின்றி ஆட்சேர்ப்பு செய்தல் வேண்டும். |

## 4. கணக்கீட்டுப் பணிகள் மற்றும் நல்லாட்சி

---

### 4.1 இணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016-2018 மற்றும் 2017-2019 ஆண்டுகளுக்காக சபையினால் தயாரிக்கப்பட்ட இணைந்த திட்டத்தின் குறைபாடுகள் மற்றும் தடைகளாக காணப்பட்ட விடயங்களை மீண்டும் 2018-2020 ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்தது. கடந்த 03 ஆண்டு காலப் பகுதியினுள் சபையினால் இப்பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | புதிய கணினி முறைமையினை தயாரிக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டு முடிவடையும் போது இப்பணிகளை முறையாக மேற்கொள்ளும் செயற்பாட்டினை ஆரம்பிக்க முடியும் என குறிப்பிடப்பட்டிருந்தது. | இணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 வருடாந்த தொழிற்பாட்டுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வு ஆண்டு காலப் பகுதிக்காக தயாரிக்கப்பட்ட தொழிற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படை விடயங்கள் 04 காணப்பட்டதுடன் அதற்கு துணை தொழிற்பாடுகள் 13 உள்ளடக்கப்பட்டிருந்தன.<br>அப்பணிகளில் மீளாய்வு ஆண்டிலே சமூக பாதுகாப்பு முறைமையினை அமுல்படுத்தல் மற்றும் அங்கத்துவ மேம்பாட்டின் கீழ் வெளித்தரப்பினருடன் இணைந்த நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்தல், பிரதேச செயலகங்கள் ஒவ்வொன்றுக்கும் அலுவலர் ஒருவர் வீதம் ஆட்சேர்ப்பு செய்தலின் கீழ் 322 அலுவலர்களை இணைத்துக் கொள்ளல் மற்றும் பயனாளிகள் | ஒப்பந்த அடிப்படையின் மீது பதவியணிக்கு ஆட்சேர்ப்பு செய்வது பொருத்தமற்றது எனவும், பயிற்சி பட்டதாரிகளை சமுர்த்தி அபிவிருத்தி அதிகாரசபைக்கு இணைப்புச் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளமையினால் அதிலிருந்து 350 அலுவலர்களை எமது சபைக்கு இணைப்புச் செய்வதற்கும் கௌரவ பிரதம அமைச்சர் மற்றும் அப்போதிருந்த சமூக வலுவு‘ட்டல் அமைச்சர் ஆகியோருடன் கலந்தாலோசித்து ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் எமது நிறுவனத்தின் விடயப் பரப்பினை மிகவும் பரந்த அளவிலும் மற்றும் சிக்கல் வாய்ந்ததாகவும் காணப்படுவதனால் | சபையினால் வருடாந்த தொழிற்பாட்டு திட்டத்தில் 01 வருட காலப் பகுதியினுள் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய நோக்கங்களை மாத்திரம் உள்ளடக்குவதற்கும் மற்றும் உள்ளடக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| நன்மைத் தொகையினை வழங்குதலை இலகுவாக முறைப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்தல் என்பவற்றின் கீழ் சிறந்த தகவல் முறைமை ஒன்றினை நிறுவுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள முடியாது போயிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட காலத்தை விடவும் அதிகமான காலப் பகுதி ஒன்று முறைமை ஆய்விற்காக செல்வதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மேற்படி தாமதத்திற்குரிய காரணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட கடிதத்துடன் புதிய கருத்திட்ட கால அட்டவணையொன்றினை தயாரித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. |

## 4.3 வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடு

------------------

| **கணக்காய்வு அவதானிப்புகள்**<br>------------------------- | **முகாமைத்துவத்தின் கருத்துரை**<br>-------------------------------- | **பரிந்துரை**<br>------------ |
|---|---|---|
| வரவு செலவுத்திட்ட மயப்படுத்தப்பட்ட வருமானங்கள், செலவினங்கள் மற்றும் உண்மை வருமானம், செலவினம் என்பவற்றுக்கிடையே 3% முதல் 85% வரையிலான எல்லையினுள் மாறுபாடுகளை அவதானிக்கக் கூடியதாக இருந்தமையால் செழிப்பான முகாமைத்துவ கட்டுப்பாட்டு முறைமை ஒன்றாக வரவு செலவுத் திட்ட ஆவணத்தை பயன்படுத்தியிருக்காமை அவதானிக்கப்பட்டது. | இவ்வாறு இடம்பெறுவதற்கான காரணம் 2017 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளில் ஒரு பகுதி திறைசேரி தொழிற்பாட்டு திணைக்களத்தினால் வழங்கப்படாமை காரணமாக 2018 ஆம் ஆண்டிலே பெறப்பட்ட நிதி ஏற்பாடுகளில் இருந்து 2017 ஆம் ஆண்டிற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை ஆகும். எனவே, 2018 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய செலவினத் தலைப்புக்களில் 130 மில்லியன் ரூபா நிதி ஏற்பாடுகள் ஒதுக்கி காட்டப்பட்ட போதிலும், உண்மையாகவே செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது 2017 ஆம் ஆண்டிற்குரிய செலவுகள் குறைந்து கிடைத்த மீதிக்காகும். அதனால் மாறுபாடுகள் காணப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சபையினால் வரவு செலவுத் திட்ட மயப்படுத்தப்பட்ட வருமானம், செலவினம் மற்றும் உண்மை வருமானம் மற்றும் செலவினம் என்பவற்றிற்கிடையே காணப்படும் மாறுபாடுகளைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |